**தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட் கருத்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ரூபா.255,459 ஆன கணனி மென்பொருள் மீதி ACA-06 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்கள கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதும் CIGAS நிகழ்ச்சிகளில் தவறாக கணக்கீடு செய்யபபட்டுள்ளதாகவும் இது தொடர்பாக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் ACA-06 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி மற்றும் SA-82 திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா.32,260,312 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | புதிய CIGAS இணையத் தளத்திற்கு தரவுகளை ஏற்றும் போது இடம்பெற்ற தொழில்நுட்ப தவறொன்று காரணமாக இவ்வேறுபாடு சொத்துக் கணக்கில் தென்படுவதாகவும் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் மீதி சரியானதெனவும் அதற்கு இணங்க CIGAS இணையத்தளத்தில் உட்படுத்தப்பட்ட தரவுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் | திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பிட்டு சரியான கணக்குகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் மூலதனச் சொத்துக்களை கையேற்றலாக ரூபா.37,913,538 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது, அதனுள் இயந்திர உபகரண பராமரிப்புச் செலவினம், மூலப்பொருள் கொள்வனவு, ஒப்பந்தச் சம்பளம், மேலதிக நேரம் மற்றும் பிரயாணப் படிகள் கொடுப்பனவு மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி மற்றும் பாதுகாப்பு மற்றும் சுத்திரகரிப்பு செலவினமாக ரூபா.30,526,815 உள்ளடக்கப்பட்ட காரணத்தினால் அப்பெறுமதி கைதவிர்ப்பாக ACA-06 நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது, அவ்வாறே கைதவிர்ப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மீண்டெழும் செலவினம் மிரிஜ்ஜவல, கம்பஹா, அவிஸ்ஸாவெல ஆகிய பூங்காக்களில் உப திட்டங்களில் காணி மேம்படுத்தல்களுக்காக செய்யப்பட்ட செயற்பாடுகளுக்காக செலவினமாகவும் அதன் மூலம் பூங்காக்கள் மேம்படுத்தப்பட்ட போதும் காணி மற்றும் கட்டிடங்களில் சொத்துக்களின் பெறுமதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படுவதாகவும் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கணக்கீடு செய்யும் போது இக்கொடுக்கல் வாங்கல்கள் காணிக் கொள்வனவொன்றாக சொத்துக் கணக்கில் பதிவு செய்யப்படுவதால் அதனை சீர்செய்வதற்காக கைதவிர்ப்பாக காண்பிக்கப்பட்டதாக | செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யபப்ட வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூங்காக்களின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது கணக்கீடு செய்யப்படாத நிலையான சொத்துக்கள் உருப்படி 881 காணப்பட்டன. | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்வதுடன் 2021 யூன் 30 இல் உள்ளவாறு முன்னைய சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | தாவரவியல் பூங்கா நிதியத்தின் சொத்துக்களாக 2010 ஆம் ஆண்டிலிருந்து தாவர பூங்கா பொறுப்பு நிதியத்தின் கீழ் இனங்காணப்பட்டிருந்த ரூபா.779,371,034 ஆன சொத்துக்கள் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்குரிய சொத்துக்களாகும். கட்டிடங்கள் திருத்தம் மற்றும் காணி அபிவிருத்தி வேலைகள் CIGAS | காணப்பட்ட கட்டிடங்கள் திருத்தம் மற்றும் காணி அபிவிருத்தி வேலைகளுக்காக பெறுமதி காணப்படும் சொத்துக்களில் பெறுமதி அதிகரிப்பாக CIGAS உள்ளடக்குவதற்கு இயலுமை இல்லாமல் இருந்ததாகவும் நூலகப் புத்தகங்களை உள்ளடக்குவதற்கு வகையொன்று இல்லாமை போன்ற விடயங்களின் பேரில் அப்பெறுமதி CIGAS நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்குவதற்கு முடியாமல் இருந்ததாகவும் மற்றும் | - மேற்படி - |

| | |
|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்தில் புதிதாக உள்ளடக்குவதற்கு முடியாமை, நூலகப் புத்தகங்களை உள்ளடக்குவதற்கு வகையொன்று இல்லாமை மற்றும் ஏனைய சொத்துக்கள் இரட்டைக் கணிப்பீடு அல்லது வேறு தவறுகள் காணப்பட்டதா என்பதாக பரீட்சித்தல் போன்ற காரணங்களின் பேரில் அச்சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா.515,856,117 ஆன சொத்துக்கள் CIGAS நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் இரட்டைக் கணிப்பீடு அல்லது வேறு தவறுகள் காணப்பட்டதா தாவரப் பூங்காக்கள் நிதியத்தின் தகவல்களுடன் பரீட்சித்து சரியானதென உறுதிப்படுத்தியதாகவும் இச்சொத்துக்கள் தற்போது CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள் ஒவ்வொன்றாக பரீட்சித்து சரியானதை உறுதிப்படுத்தியதன் பின்னர் உள்ளடக்க வேண்டிய அச்செயற்பாடு ஓரளவு காலமெடுக்கும் செயற்பாடாக இருந்ததுடன் தற்போது அப் பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான உதவித் தொகை மற்றும் மாற்றல்கள் ரூபா.65,370,503 ஆக இருந்த போதும் திணைக்களத்தினால் காசுப்பாய்சச்ல் கூற்றிற்கு ரூபா.81,166,169 என பதிவுசெய்யப்பட்ட காரணத்தினால் தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்கான செலவிடபபட்ட காசுப்பாய்ச்சல் ரூபா.15,795,666 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் சரியாக காண்பிக்கப்பட்டுள்ள தாகவும் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்காக செலவினம் ரூபா.489,215,172 எனவும் உதவித் தொகை மற்றும் மாற்றல்கள் ரூபா.1,919,635 என காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டு இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதாக | தொழிற்பாட்டு செயற்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா.516,119,020 ஆக இருந்த போதும் திணைக்களத்தினால் காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா.409,968,638 என பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டுச் செலவினமாக ரூபா.516,119,020 அல்லாமல் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்கான செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா.106,150,382 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா.489,215,172 ஆக இருக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரதி இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதாக | |
| (இ) | மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பௌதீக சொத்துக்கள் கையேற்றலாக மொத்த மூலதனச் செலவினமான ரூபா.128,268,255 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு என ரூபா.37,913,538 தொகையே கையேற்றல்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா.90,354,718 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் வரவு செலவுத் திட்ட வகைப்படுத்திலின் கீழ் தயாரித்துள்ளதாக | முதலீட்டு செயற்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.3 அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள திணைக்களத்தில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் இடர்கடன் மீதிகள் உறுப்பினர் கடன் பதிவேட்டில் (CC10) இன் பிரகாரம் கடன் மீதிகளுக்கு இடையே ரூபா.2,330,973 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட வேறுபாடு உள்ளதாக ஏற்றுக் கொள்வதாகவும் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | அரசாங்க உத்தியோகத்தர் களின் முற்பண கணக்கின் மீதி மற்றும் உறுப்பினர் கடன் பதிவேட்டில் தனியால் கடன் மீதிகள் சமப்பட வேண்டும். |

### 1.6.4 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் மற்றும் முற்பண பதிவேடு | | |
| | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் மற்றும் முற்பண பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பதிவேட்டை எதிர்வரும் காலங்களில் சரியாக பேணிச் செல்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் உறுப்பினர் கடன் மற்றும் முற்பண பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | வனப் பூங்கா மரப் பதிவேடு | | |
| | தாவரவியல் பூங்கா ஒன்றில் பிரதானமாக பயன்படுத்த வேண்டிய பதிவேடொன்றான மர பதிவேடு கம்பஹா தாவரவியல் பூங்கா, மீகலேவ பசுமை இல்ல பயிற்சி நிலையம், சீதாவக்க ஈரவலய தாவரவியல் பூங்கா, என்பவற்றால் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | தாவரவியல் பூங்காவில் காணப்படும் சகல மரங்களையும் ஒரே பதிவேட்டில் பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | வனப் பூங்கா மரப் பதிவேட்டினை நாளதுவரையாக பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் உரிய காலப்பகுதியில் அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்கல் இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும். அறிக்கையின் 3.11 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயற்பாடுகளை ஆக்கபூர்வமாக கட்டுப்படுத்துவதற்காக மாதாந்தம் தாவரவியல் திணைக்களத்திற்கு தேவையான கட்டுநிதி அளவு தொடர்பான திட்டமிடப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டின் மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை கட்டுநிதி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை மாதாந்த கட்டுநிதித் திட்டத்தை தயாரிப்பதற்கு தாமதமாகி யதாகவும் சந்தர்ப்பத்திற்கேற்ப நாட்டில் காணப்பட்ட நிலைமையின் பிரகாரம் மாதாந்த கட்டுநிதி விண்ணப்பம் மூலம் கட்டுநிதி வேண்டுகோள் விடப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்ததாக | திணைக்களத்திற்கு தேவையான கட்டுநிதி அளவு திட்டமிடப்பட வேண்டும். |

### 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 85(1)இ மற்றும் நிதிப்பிரமாணம் 143(1) இன் பிரகாரம் சேகரிப்பதற்கு உள்ள பணத்தை சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அவ்வாறே திறைசேரி செயலாளரின் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் மிகவும் செயற்திறனாக எதிர்வுகூறப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் திருத்திய மதிப்பீட்டு வருமானம் ரூபா.550,000,000 ஆக இருந்த போதும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா.286,772,138 ஆக இருந்த காரணத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா.263,227,862 அதாவது 48 சதவீதம் குறைவடைந்திருந்தது. | வருமான மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்ட சந்தர்ப்பம் வரை நாட்டில் ஏற்பட்ட Covid 19 தொற்று நிலைமை படிப்படியாக குறைவடைந்து 2020 யூன், யூலை ஆகஸ்ட் மற்றும் செப்தம்பர் மாதங்களில் தாவரவியல் பூங்கா வருமானம் படிப்பயாக அதிகரித்ததாகவும் அதன் பிரகாரம் திசெம்பர் மாதம் அளவில் படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டு வருமானம் திருத்தம் செய்யப்பட்ட போதும் Covid 19 இரண்டாவது அலை 2020 ஒக்தோபர் மாதம் மீண்டும் தொற்றியதன் காரணமாக எதிர்பார்த்த வருமானத்தை உழைக்க முடியவில்லை. | நிதிப் பிரமாணம் 85(1)ஆ மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதி கொள்கை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானம் மிகவும் செயற்திறனாக எதிர்வுகூறப்பட வேண்டும். |

## 2.3 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திணைக்களத்தில் மூலன செலவினத்திற்காக தேறிய நிதி ஏற்பாடு ரூபா.183,962,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா.128,268,255 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மூலதனச் செலவில் ரூபா.55,693,745 அதாவது 30 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | சில செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் கட்டுநிதி விண்ணப்பம் மூலமாக மூலதனச் செயற் திட்டங்களுக்காக கோரப்பட்ட ரூபா 121 மில்லியன் கட்டுநிதி முழுமையாக கிடைக்காமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதகவும் அது நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தவுதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டதால் பொருட்கள் கிடைக்காமை மற்றும் நாட்டில் Covid 19 தொற்று நிலைமை காரணமாக அன்றாட செயற்பாடுகளில் காணப்பட்ட வெவ்வேறு சிக்கல்களினால் கேள்வி கிடைக்காமையால் கைவிடுவதற்கு நேர்ந்ததாக | நிதிஏஏற்பாடு செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் இரண்டு செலவின விடயங்களில் சேமிப்புக்களை மிகைத்து ரூபா.3,478,830 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்வதுடன் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் | நிதிஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது 13 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா.1,056,682 ஆன செலவினம் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 6 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பொறுப்புக்களாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்வதுடன் பொறுப்புக்கள் பதிவேட்டை சரியாக முன்வைப்பதாக | அனைத்துப் பொறுப்புக்களும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | | **இணங்காமை** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 643 | சீத்தாவக்க தாவரவியல் பூங்கா களஞ்சியத்தில் காலாவதியாகாத 6947 வெளிநாட்டு நுழைவுச்சீட்டுக்கள் தொடர்பா நிதிப்பிரமானங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய வெளிநாட்டு நுழைவுச்சீட்டுக்களை சட்டரீதியாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | காலாவதியாகாத படிவங்களை நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதி வழங்கப்பட்ட 1589/30 ஆம் இலக்க அதிவிசேட | கம்பஹா தாவரவியல் பூங்கா வின் 6 உத்தியோகத்தர்கள் 9 ஆண்டு முதல் 20 ஆண்டுகளாக ஒரே சேவை நிலையத்தில் சேவை சேவை புரிந்து வந்தனர். | திணைக்கள மயப்படுத்திய பதவிகளில் இடமாற்ற கொள்கையொன்று இல்லையெனவும் குடியிருக்கும் இடத்திற்கு அண்மித்தாக சேவை நிலையமொன்றை வழங்குவதால் திருப்தியான | செயற்பாட்டுக் கோவையின் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கோவையின் 01 ஆம் தொகுதியின் XVIII ஆம் அத்தியாயததின் 193 ஆம் பிரிவு | உத்தியோகத்தர்கள் மூலம் மிகவும் சிறந்த சேவையொன்றை பெற்றுக் கொள்ள முடியுமென |

**2.6 முற்பணங்களை வழங்குதலும் மற்றும் தீர்ப்பனவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வுபெற்ற, மரணித்த, சேவையை விட்டுச்சென்ற மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா.673,250 தொகையான கடன் மீதிகளை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XxIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சில கடன் மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை கடன் மீதிகள் தொடர்பாக தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.7 வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுளை மிகைத்துள்ள ரூபா.5,013,965 கூட்டுத்தொகையான 30 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சில வைப்புக்கள் தொடர்பாக உரிய நிறுவனம் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் சில வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய ஆண்டில் வருடாந்த பாதீட்டை அடிப்படையாக கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், செயற்படுத்தப்பட்ட காலப்பகுதி மற்றும் அச்செயற்பாடு களிலிருந்து எதிர்பார்த்த விளைவுகள் / பெறுபேறுகள் உள்ளடக்கப்படும் வகையில் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | கருத்துரை தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் முன்னைய ஆண்டின் பெறுகைத் திட்டம் ஹக்கல தாவரவியல் பூங்காவின் LED பதாதை பொருத்தும் செயற்பாடு உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. 2019 ஆம் ஆண்டின் செலவினத் தலைப்பு 6000-0-0-6-70 இன் கீழான ரூபா.6,481,080 ஆன நிதி ஏற்பாடு இதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. தேசிய பூங்காக்கள் திட்டத்திற்காக இனங்காணப்பட்ட ஆரம்ப செயற்களில் பெரும்பாலானவை மேலும் பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் முன்னுரிமை தொடர்பான கவனமொன்று இல்லாமல் இப்பெறுகை செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருந்தது. | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை | செயற்பாடுகளை மாற்றும் போது செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்தி அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு மட்டங்களை அடையாமை**

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மிரிஜ்ஜவல தாவர பூங்காவின் பூக்கள் வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தொற்றுக்குள்ளான நாற்றுக்கள் தொடர்பான பரிசோதனையின் போது 2019 சனவரி முதல் 2020 ஆகஸ்ட் வரை காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை 10460 மற்றும் தொற்றுக்குள்ளான நாற்றுக்களின் எண்ணிக்கை 4987 ஆக இருந்தது. அது 48 சதவீதமாக இருந்தது. | இதற்காக தொடர்புபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் குறைந்த நிபுணத்துவம் இதற்கு காரணமாக உள்ளதாகவும் தற்போது அதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக | உற்பத்தி செய்யப்படும் நாற்றுக்களின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) ரோயல் தேசிய பூங்காவின் களஞ்சிய கட்டிடத்தின் திருத்த வேலை ஒப்பந்தத்திற்குரிய 152 உருப்படிகளில் 85 உருப்படிகளின் பெறுமதி ரூபா.3,046,321 அதாவது 16.54 சதவீதத்திற்குரிய வேலை மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விட குறைத்து நிறைவேற்றப்பட்டிருந்தது. அதில் 28 உருப்படிகளுக்குரிய பெறுமதி ரூபா.1,256,822 ஆன செயற்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இத்திணைக்களத்தின் செயற்பாடுகளை நிறை வேற்றும் போது இடம்பெற்ற மாற்றங்கள் காரணமாக இம்மேலதிக செயற்பாடுகளை நிறைவேற்றவதற்கு நேர்ந்துள்ளதாக | மதிப்பீடு செய்யப்பட்ட விடயங்கள் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும் |
| (இ) ரோயல் தேசிய பூங்காவின் களஞ்சிய கட்டிடத்தின் திருத்த வேலை ஒப்பந்தத்திற்குரிய அளவீட்டு பத்திர பட்டியல் மற்றும் அளவீட்டுப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட 63 ஆம் இலக்க உருப்படி மற்றும் 122 ஆம் உருப்படியின் பிரகாரம் கீழ் மாடி மற்றும் மேல் மாடியின் நிலத்திற்கு சீமெந்து இடுவதற்காக முறையே 222.98 சதுர மீற்றர் மற்றும் 239.41 சதுர மீற்றருக்காக ரூபா.674,221 பரிந்துரைக்கப்பட்டு கொடுப்பனவு | இக் குறைபாட்டை மீண்டும் திருத்தி தருமாறு 2021 மார்ச் 15 ஆந் திகதி கடிதமொன்று மூலம் ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதும் 2020 செப்தம்பர் 20 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் பிரகாரம் நில மாடி மற்றும் மேல் மாடி என்பவற்றில் சீமெந்து இடப்பட்ட நிலம் சிதைவடைந்திருந்தது. | | |
| (ஈ) | ரோயல் தேசிய பூங்காவின் களஞ்சிய கட்டிடத்தின் திருத்த வேலை ஒப்பந்தத்திற்குரிய 144 ஆம் உருப்படி மற்றும் அதன் வரைபு திட்டம் (Drawings) இன் பிரகாரம் அலகொன்று 40 அடி நீளமான இரும்பினால் ஆன பால்கை (Truss) 2 அடிக்கு 2 அடி வரும் வகையில் 04 பால்கை (Truss) 140 துண்டுகள் உள்ளடக்கப்படும் வகையில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 88 துண்டுகள் உள்ளடக்கப்படும் வகையில் 52 துண்டுகள் குறைத்தும் வரைபு திட்டத்தின் (Drawings) பிரகாரம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | 88 துண்டுகளை ஈடுபடுத்தயாகவும் குறைவாக பயன்படுத்தி 52 துண்டுகளிற்காக ரூபா 62,882 தொகை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளதாக | - மேற்படி - |

## 3.4 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை (Out come) அடையாமை

------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மிரிஜ்ஜவல தாவர பூங்காவில் 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி ரூபா.6,677,573 ஆன ஒப்பந்தப் பெறுமதிக்கு சிற்றுண்டிச்சாலையொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டம் 2016 திசெம்பர் 21 ஆந் திகதி பூர்த்தி செய்து தருமாறு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் அத்திகதி முதல் 2020 திசெம்பர் 31 அந் திகதி வரை 04 ஆண்டு காலம் கடந்திருந்த போதும் அவ்வாறு | எதிர்பார்க்கப்பட்ட பார்வையாளர்கள் இல்லாமை காரணமாக சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கு கேள்விதாரர் ஒருவர் முன்வராமையால் தகவல் நிலையமொன்றாக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் எதிர்பார்த்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | மிரிஜ்ஜவல தாவர பூங்காவில் ரூபா.26,567,937 ஆன ஒப்பந்தப் பெறுமதிக்கு ஆராய்ச்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் இந்த ஆராய்ச்சி நிலையம் 2019 நவம்பர் 26 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்நிர்மாணம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி நிலையத்தை ஆரம்பிப்பதற்காக தேவையான அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நிதிஏற்பாடு 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் போது கிடைத்தமை இதற்கான காரணமாக இருந்தது. | எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்வதற்கு குறித்த சொத்துக்களை பயன்படுத்த வேண்டும். |
| (இ) | கம்பஹா தாவரவியல் பூங்காவில் வருகை தருவோரின் இரசணையை அதிகரிப்பதற்காக ரூபா 23.76 மில்லியன் கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு நிலையத்தில் 2017 ஆம் ஆண்டின் போது உடவெடியா (ஓர்கிட்) வலை கூடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இவ்வலை கூட்டின் அமைவிடம், அதன் மாதிரி மற்றும் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடிகள் நிறம் மாறியிருந்தமை காரணமாக உடவெடியா பூக்கள் மலருவதற்கான காலை வேலைகளில் தெளிவான சூரிய ஒளி கிடைப்பதில் குறைந்த போக்கொன்று காணப்பட்டமை உடவெடியா பூக்கள் மலருவது இடம்பெறவில்லை. இதனால் நிர்மாணிக்கப்பட்ட வலை குகையினால் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | தற்போது அமைக்கப்பட்டுள்ள மாதிரியை மாற்றுவதற்கு முடியாமல் இருந்ததுடன் குகைக்கு கிடைக்கும் காலை வேலையிலான சூரிய ஒளியை அதிகரிப்பதற்கு சுற்றியுள்ள தாவரங்களின் கிளைகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் குகையின் கண்ணாடி வாராந்தம் சுத்திகரிக்கப்பட்டு வருவதாக | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஓகிட் தாவரத்தை அலங்காரமாக பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஈ) மீகலாவ பசுமை பயிற்சி நிலையத்தில் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா.3,995,092 தொகையொன்று செலவிடப்பட்டு களஞ்சியமொன்றும் அதற்கு அண்மித்ததாக வீடொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அது நிர்மாணிக்கப்பட்ட ஆண்டிலிருந்து 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நலன்புரி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. | இதனைப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமையால் இதுவரை அதனை குடியிருப்பிற்கு வழங்கப்படவில்லையென | எதிர்பார்த்த நோக்கங்களுக்காக பயன்படுத்த வேண்டும். |

**3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மிரிஜ்ஜவல உலர் வலயத்தின் பூங்காவில் பாலைவன மாதிரியொன்றை வடிவமைக்கும் நோக்கில் 2018 திசெம்பர் 12 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.770,000 பெறுமதியான 110 கியுப் மணல் 2020 செப்தம்பர் 04 ஆந் திகதி வரை ரூபா.266,000 பெறுமதியான 38 கியுப் மணல் 01 ஆண்டு முதல் 08 மாதங்கள் எதிர்பார்த்த நோக்கங்களுக்காக பயன்படுத்தாமல் பூங்கா வளவில் காணப்பட்டது. இதற்காக மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கபபட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டினை தயாரிப்பதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் பூங்காவில் இல்லாமையால் பாலைவன மாதிரியொன்றை வடிவமைப்பதற்காக விசேடத்துவ அறிவு தேவையெனவும் எஞ்சியிருந்த அனைத்து கடல் மணலைப் பயன்படுத்தி பாலைவன மாதிரி வடிவமைத்தல் பூர்த்தி செய்யப்பட்டு வருவதாக | உரிய செயற்பாடுகளை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சீதாவக்க ஈரவலய அலுவலக கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2019 ஏப்ரல் 22 ஆந் திகதி முதல் 08 மாதங்களுக்குள் அதாவது 2019 திசெம்பர் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதும் அது நிர்ணயிக்கப்பட்ட திகதியை விட 239 நாட்களுக்கு பின்னர் அச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | உரிய செயற்பாடுகளை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்ய வேண்டும். |

### 3.6 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன் முன்னேற்றம் கண்டிடராத செயற்திட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சீதாவக்க ஈரவலய அலுவலக கட்டிடம் ரூபா.25,682,196 (வெட் இல்லாமல்) ஒப்பந்த பெறுமதிக்கு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி பூர்த்தி செய்து கையளிக்கப்பட்டிருந்த போதும் 2021 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையிலும் உரிய கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு முடியாமை காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்பட்டது. இவ்வாறு குறித்த கட்டிடம் மற்றும் மின் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்ததால் பயன்பாட்டிற்கு எடுக்காமல் அதன் குறைபாடுகள் தொடர்பான உத்தரவாதக்காலமும் (Defects Liability Period) மின் உபகரணங்களின் உத்தரவாதக்காலமும் முடிவடைந்தமையால் குறுகிய காலப்பகுதியில் ஏதேனும் திருத்தங்களோ அல்லது புதிய உபகரண பரிமாற்றமோ செய்து கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் நிறுவனத்திற்கு இல்லாமல் போயிருந்தது. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கை மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 06 வேலை விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்த மொத்த நிதி ஏற்பாடுகளையும் அதாவது ரூபா.6,500,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை சேமிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும் |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளிலிருந்து 13 செலவின விடயங்களில் நிதி ஏற்பாடுகளின் சேமிப்புக்கள் 14 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும் |

## 3.8 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.3 பந்தியின் வழிகாட்டலுக்கு புறம்பாக மிரிஜ்ஜவெல உலர்வலய தாவரவியல் பூங்காவில் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் மேற்கொள்ளப்பட்ட மொத்தம் ரூபா.3,778,462 ஆன 20 | குழுவின் தலைவருக்கும் மாவட்ட செயலாளரின் கணக்காளருக்கும் கேள்வி திறக்கும் செயற்பாட்டிற்காக காணப்படும் கடமைகள் காரணமாக நிர்ணயித்த திகதிகளில் சமூகமளிக்க முடியாதிருந்ததாகவும் | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கேள்வி திறக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகை விலை கோரல் சந்தர்ப்பங்களுக்குரிய கூறுவிலைகளைத் திறக்கும் போது 01 நாள் முதல் 10 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. | அதன் காரணமாக கேள்வி திறத்தல் திகதிகளில் வேறுபடுவதற்கு காரணங்களாக இருந்தன. | |
| (ஆ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட 4 நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2 (அ) மற்றும் (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை காலஅட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் பின்னர் பெறுகை காலஅட்டவணையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கேள்வி திறக்கப்பட வேண்டும். |
| (இ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட 4 நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.4 வழிகாட்டலின் பிரகாரம் திணைக்கள தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு நியமனத்திற்கான வேண்டுகோள் பெறுகை குழு நியமனத்திற்காக செய்யப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.4 இன் பிரகாரம் திணைக்கள பெறுகைக் குழு தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழு என்பன திணைக்களத் தலைவரினால் மேற்கொள்ள வேண்டிய போதும் அதன் பிரகாரம் எமது திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக. | - மேற்படி - |
| (ஈ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட 4 நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள நியம கேள்வி பதிவேடு பெறுகை செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் சிறிய அளவிலான பெறுகை செயற்பாடுகளுக்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள நியம கேள்வி பதிவேட்டினை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நியம கேள்வி பதிவேடு பெறுகை செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட 4 நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.2 வழிகாட்டலின் பிரகாரம் திணைக்கள வேலை பூர்த்தி சான்றிதழொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு உறுதிச்சீட்டில் 8.12.2 பரிந்துரை சிவில் பொறியியலாளரால் வழங்கப்பட்டுள்ளதாக | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கேள்வி திறக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ரோயல் தாவர பூங்காவின் பால்சாலையின் கூரை திருத்த வேலை ஒப்பந்தத்தின் 06 ஆம் இலக்க உருப்படியில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா.911,400 ஆக இருந்ததுடன் அதற்காக கேள்வி ரூபா.492,000 கேள்வியில் குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி மதிப்பீட்டின் போது அது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் இந்த ஒப்பந்தம் தொடர்பாக ரூபா.320,056 ஆன மேலதிக வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் ரூபா.494,167 ஆன வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அது மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதயில் 21 சதவீதமும் 33 சதவீதமாகவும் காணப்பட்டன. 03 ஆம் உருப்படியின் பிரகாரம் 30.71 சதுர மீற்றருக்காக லுனுமிதல்ல பலகை பயன்படுத்துவதற்கு ரூபா.61,020 தொகை கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை, 85.57 மீற்றர் அளவிலான 45 பூவரச மரப்பலகையில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை, உருக்குலைந்து இருந்தமை, பொருத்துதலாக (joint) இணைக்கப்பட்டிருந்தமை பலகைகள் வளைந்து காணப்பட்டமை போன்ற விடயங்களின் பேரில் பொருத்தமான தரமான மரப் | இது தொடர்பாக ஒப்பந்தக்காரர் அழைக்கப்பட்டு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன் பூவரச மரப்பலகைத் இருப்பொன்று அவரிடம் இருப்பதால் அப்பெறுமதிக்கு இந்த செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு அக்கூற்றை எழுத்து மூலமாக வழங்குவதற்கு ஒப்பந்தக்காரர் இணங்கிய போதிலும் தவறுதலாக அந்த எழுத்துமூல உறுதியை பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்ததாகவும் நிர்மாண சந்தர்ப்பத்தின் போது நல்ல நிலைமையில் காணப்பட்ட பொருட்களை மீண்டும் பயன்படுத்த முடியுமாக இருந்ததால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததாகவும் இப்பகுதி பூர்த்தி செய்யப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்துள்ளதால் சூரிய ஒளி நேராக படுவதால் இப்பலகைகளின் தடிப்பில் ஏதேனும் ஒரு பகுதி குறைவடைந்துள்ளதாகவும் வளைந்துள்ள பலகைகள் மற்றும் சிதைவடைந்த பகுதிகளை அகற்றி மீண்டும் பலகைகளை | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பலகைகள் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதற்காக ரூபா.140,531 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்நிர்மாணங்களின் குறைபாடுகளை திருத்தம் செய்து தரும் வரையில் பிடிகாசினை வழங்க முடியாதெனவும் அறிவித்து 07 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அக்குறைபாடு 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சீராக்கம் செய்யப்பட்டிருக்க வில்லை. | பொருத்துமாறு இவ் வொப்பந்தக்காரருக்கு மூன்றாவது தடவையாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாக. | |
| (எ) | ரோயல் தேசிய பூங்காவின் களஞ்சிய கட்டிடத்தின் திருத்த வேலை ஒப்பந்தத்திற்குரிய 152 உருப்படிகளில் 37 உருப்படிகளின் சுற்று 7.12 சதவீதம் முதல் 1800 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. மேலதிகமாக 29 உருப்படிகள் நிறைவேற்றப் பட்டிருந்ததுடன் அதன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா.2,039,943 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்த செயற்பாட்டிற்குரிய விலகலின் பெறுமதி ரூபா.4,234,653 ஆக இருந்தமை மற்றும் அது மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதி 23 சதவீதமாக இருந்தமையால் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 வழிகாட்டலுக்கு இணங்காத வகையில் செயற்படுத்தப் பட்டிருந்தது. | இந்த ஒப்பந்தத்தின் செயற்பாடுகளை நிறை வேற்றும் போது ஏற்பட்ட வேறுபாடு காரணமாக இவ்விலகல் ஏற்பட்டுள்ளதாக | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | ரோயல் தேசிய பூங்காவின் களஞ்சிய கட்டிடத்தின் திருத்த வேலை ஒப்பந்தத்திற்குரிய பொறியியலாளர் மதிப்பீட்டின் 144 ஆம் உருப்படியின் பிரகாரம் இரண்டாவது மாடியின் கூரை இரும்பின் மூலம் நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக ரூபா.215,600 வீதம் இரும்பினால் ஆன 4 பால்கை (Truss) 04 பால்கைகளின் மதிப்பீட்டு கிரயம் ரூபா 862,400 ஆக இருந்த போதும் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரால் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவனால் இது தொடர்பாக ஒப்பந்தக்காரரிடம் விசாரித்த போது தமது நிறுவனத்திற்கு அதன் விதந்துரைகளின் பிரகாரம் இரும்பு பால்கை மேலதிகமாக காணப்படுவதால் அப்பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வும் அதனை எழுத்துமூலம் வழங்குமாறு | முறையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலகொன்றுக்கு ரூபா.100,000 வீதம் 04 அலகுகளுக்காக ரூபா 400,000 இற்கு நிர்மாணிப்பதற்கு உடன்படிக்கை செய்திருந்தார். அதன் பிரகாரம் மதிப்பீட்டு பெறுமதியை விட ரூபா 462,400 அதாவது 53.6 சதவீதம் குறைத்து கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டிருந்த போதும் தவறுதலாக குறித்த கடிதத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் போனதாக | |
| (ஐ) | சீத்தாவக்க ஈர வலயத்தின் தாவர பூங்காவின் அலுவலக கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்த செயற்பாடுகள் விலகலின் மொத்தப் பெறுமதி ரூபா.5,891,292 ஆக இருந்தமை மற்றும் அது மொத்த மதிப்பீட்டு பெறுமதியில் 19.6 சவீதமாக இருந்தமை அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 வழிகாட்டலின் நியதிகளுக்கு புறம்பாக செயற்பட்டிருந்தது. மேலும் இச்செயற்திட்டம் தொடர்பாக கருத்திற் கொள்ளும் போது விலகல் 15 சதவீதமாக இருந்த போதும் இது தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை இக்கட்டிடத்தின் இரும்பு கிரில் துருப்பிடித்தலுக்கு உட்பட்டிருந்தது. இருந்த போதும் 157.32 சதுர மீற்றருக்காக ரூபா.1,681,110 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கட்டிடத்தின் உள்ளே Homogeneous glazed polished floor tile இடப்பட வேண்டிய போதும் Homogeneous polished floor tile இடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா.267,063 கூடுதலாக ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, மேலும் Skirting இற்காக glaze polished floor tile இற்காக கொடுப்பனவு செய்யப்படும் விகிதத்தை பயன்படுத்தி ரூபா.176,822 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அலுவலக கட்டிடத்தின் படிக்கட்டுகளுக்காக கைவேலியொன்றை | கருத்துரை தெரிவிக்கவில்லை. | மதிப்பீடு மிகச் சரியாக தயாரிக்க வேண்டியுள்ளதுடன் மதிப்பீட்டு செயற்பாட்டை சரியாக மேற்கொள்ள வேணடும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைப்பதற்கு ரூபா.186,560 தொகை கொடுப்பனவு செயயப்பட்டிருந்த போதும் கைவேலியின் கிடைப்பகுதிக்கு இடப்பட்ட 1” விட்டத்துடனான உருக்கு குழாய்க்கு இடையே விலகல் அளவீட்டுப் பத்திரத்தின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்காத வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கைவேலியும் துருப்பிடித்திருந்தது. | | |
| (ஐ) | ஹக்கல தாவரவியல் பூங்காவின் LED பதாதையொன்றை தயாரித்து பொருத்துவதற்காக கூறுவிலை கோரி அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6.1(இ) வழிகாட்டலுக்கு புறம்பாக 02 LED பதாதைகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு வழிகாட்டல் கோவையின் 7.11.1(இ) வழிகாட்டலுக்கு புறம்பாக சகல உறுதிப்படுத்தும் ஆவணங்கள் உட்பட மதிப்பீடு மற்றும் உறுதிப்படுத்தப்படாமல் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. இதற்காக 4.3 வழிகாட்டல் கோவையின் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 3.8 வழிகாட்டலின் பிரகாரம் 10 சதவீத செயலாற்றல் பிணைப் பொறுப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த LED பதாதை செயற்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்கு பொருத்தமானதென உறுதிப்படுத்தாமலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெற்றுக்கொள்ளாமல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி இதற்காக ரூபா.6,481,080 | கருத்துரை தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முத்தரப்பு மின் இணைப்பு பெற்றுக் கொள்ளப்படாமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தது. | | |
| (ஒ) | ஹக்கல தாவரவியல் பூங்காவின் மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்காக ரூபா.2,704,097 ஆன மதிப்பீட்டில் அலுமினியம் கதவுகளை வழங்கி பொருத்துவதற்கு 29.6 சதுர மீற்றருக்காக ரூபா.297,213 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீடு தயாரிக்கும் போது அலுமினியம் தகரங்களின் தடிப்பு மற்றும் தரம் தொடர்பாக குறிப்பிடப்படாமை காரணமாக அக்கதவுகள் உறுதியற்றதாக இருப்பதும் மீண்டும் அக்கதவுகளை திருத்தியமைக்க வேண்டுமெனவும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. | கருத்துரை தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை | விதந்துரைகள் மிகவும் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீகலேவ பசுமை இல்லம் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு விசிரல் நீர் முறைமையொன்றை அமைப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா.625,373 ஆன செலவினமொன்றில் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 1 ஹெக்டேயருக்கு அண்மித்த அளவில் விசிரல் நீர் வழங்கல் முறைமை பொருத்தப்பட்டிருந்த போதும் பூங்காவில் | 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை பகுதி பகுதியாக தற்போது காணப்படும் விசிரும் நீர் வழங்கல் முறைமை அமைக்கப்பட்டுள்ளதாகவும் அப்போது காணப்பட்ட பொருத்தமற்ற காலநிலை யொன்று காணப்பட்டதுடன் நிலத்தில் வடிகாண் வெட்டுவது சிக்கலாக இருந்தமையால் நீர் வழங்கல் முறைமையின் எஞ்சிய பகுதிகளுக்கு பின்னர் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதால் 2020 ஆம் ஆண்டில் Covid 19 காரணமாக சில | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை எதிர்பார்க்கப்பட்ட விடயங்களுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட பழைய கிணற்றின் நீரின் இயலளவு போதாமையால் விசிரும் நீர் முறைமை செயற்படாமையால் விளைவற்ற வகையில் இருப்பதாகவும் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களில் ரூபா.48,505 பெறுமதியான 2 அங்குலமான 109 பீ.வீ.சீ. குழாய்கள் ரூபா.144,270 பெறுமதியான 1 அங்குலமான 630 பீ.வீ.சீ. குழாய்கள் 2020 திசெம்பர் 17 ஆந் திகதி வரையிலும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | மாதங்கள் தொழிலாளர்கள் வராமை மற்றும் பயிர்ச்செய்கை கிணற்றை அமைப்பதற்கு முடியாமை காரணமாக எஞ்சிய பகுதியை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்ததாக | |
| (ஆ) | மீகலேவ பசுமை இல்லம் பயிற்சி நிலையத்தில் ரூபா.8,118,525 செலவிடப்பட்டு நிர்மாணக்கப்பட்டிருந்த தங்குமிட விடுதி 2018 ஆம் ஆண்டில் 2 வதிவிட பயிற்சி திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் எவ்வித வதிவிட பாடமொன்றுக்காக பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு மற்றும் கொரோனா நிலைமையின் காரணமாக நாட்டில் ஏற்பட்ட நிலைமைகளின் கீழ் பயிற்சிகளை நடாத்த முடியாமல் இருந்ததாக | திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சீத்தாவக்க ஈரவலய தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான காணியில் ½ ஏக்கர் அளவிலான வயல் காணி அத்துமீறிய குடியிருப்பாளரால் உடமை கொண்டுள்ளதுடன் சீதாவக்க பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக 2021 பெப்ரவரி 03 ஆந் திகதி | இந்த அத்துமீறிய குடியிருப்பாளரை அகற்றி காணிப் பிரச்சினையை தீர்வு செய்வதற்கு சட்டமா அதிபரால் சீதாவக்க பிரதேச செயலாளருக்கு ஆலோசணை வழங்கப்பட்டிருந்த போதும் அதற்காக பதில் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதி சீதாவக்க பிரதேச செயலாளரின் | திணைக்களத்தினால் உடமை கொள்ளும் அனைத்துக் காணிகளையும் சிக்கலற்ற உரித்தினை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரை தீர்வொன்று கிடைத்திருக்கவில்லை. | கையொப்பத்தடன் இத்திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | |
| (ஈ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 2 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட நிறுத்தி வைக்கப் பட்டுள்ள 5 வாகனங்களை திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை தெரிவிக்கவில்லை | வாகனங்களை கைதவிர்ப்பதற்கோ அல்லது திருத்தம் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அம்பாந்தோட்டை உலர் வலய தாவரவியல் பூங்காவில் வியாபார நிலையங்கள், பேராதனை ரோயல் தாவரவியல் பூங்காவின் நூதனசாலை மற்றும் மீகலேவ பசுமை இல்ல பயிற்சி நிலையத்தின் வதிவிட விடுதிக்கு உரிய சொந்தமான 20250 சதுர அடி அளவு 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டது. | கருத்துரை தெரிவிக்கவில்லை | திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | தேவைப்பாடு முறையாக இனங்காணப்படாமல் கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள் இருப்புக்களில் ரூபா.1,060,120 ஆன இருப்பொன்று 2020 நவம்பர் 13 ஆந் திகதி வரை ஹக்கல தாவரவியல் பூங்காவின் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | தேவைப்பாடு முறையாக இணங்காணப்பட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். |
| (எ) | பேராதனை தாவரவியல் பூங்காவின் இயந்திர கூடத்தினால் குப்பை கூளங்களை துடைத்து சேகரிப்பதற்காக மிதித்துச் செல்லக்கூடிய இயந்திரமொன்று | கருத்து தெரிவிக்கவில்லை. | குறித்த இயந்திரத்திற்காக புதிய இயந்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்கோ அல்லது உத்தரவாத காலத்தில் திருத்தம் |

| | | |
|---|---|---|
| ரூபா.2,242,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சமாந்திரமல்லாத நிலத்தில் குப்பை கூளங்களை துடைத்து சேகரிக்க முடியாமை காரணமாக இந்த இயந்திரம் உத்தரவாத காலத்தில் செயற்பாடற்று காணப்பட்டது. | | செய்வற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.10 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் மிரிஜ்ஜவல மற்றும் கம்பஹா தாவரவியல் பூங்காக்களுக்கு இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 32 ஊழியர்களிடமிருந்து பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பிணை அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பூங்காக்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.11 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் பதில் அளிக்கப்படாமல் இருந்தது. | கருத்து தெரிவிக்க வில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.12 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மிரிஜ்ஜவல தாவரவியல் பூங்காவிற்குச் சொந்தமாக காணப்படும் 10 கொல்ப் கார்கள் 03 ஆண்டிற்கு அண்மித்த காலமாக தொழில்நுட்ப பிழை காரணமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. மேலும் 2018 யூன் முதல் 2020 பெப்ரவரி வரையான காலவீச்சில் நாளாந்தம் சேவைக்காலம் 08 மணித்தியலாமாக கருதும் போது 41376 ஆன வேலை செய்யக்கூடிய மணித்தியாலங்களின் அளவு 33891 கோல்ப் வண்டி ஓட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்படும் கொரோனா நிலைமை காரணமாக பார்வையாளர்கள் அதிகளவில் குறைவடைந்தததன் காரணமாக கோல்ப் கார் கேள்வி குறைவடைந்ததாக | தேவைப்பாடு முறையாக இனங்காணப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளல் மற்றும் சொத்துக்கள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மிரிஜ்ஜவல தாவரவியல் பூங்காவில் தென்பகுதி நுழைவாயிலில் இருந்து டிரோபியர் பூங்கா வரை பாதுகாப்பு வழங்குவதற்காக 2019 திசெம்பர் ரூபா.273,000 கொள்வனவு செய்யப்பட்ட 39 GI குழாய்கள் அச்செயற்பாட்டிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதாகவும் தாபன விதிக்கோவையின் பிரகாரம் உரிய உத்தியோக்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் | - மேற்படி - |
| (இ) | தேவைப்பாட்டை முறையாக இனங்காணாமல் கம்பஹா தாவரவியல் பூங்காவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவு காரணத்தினால் ரூபா.437,259 ஆன 05 இருப்பு உருப்படிகள் கணக்காய்வு திகதியான 2020 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் காணப்படுவதுடன் களஞ்சிய வசதிகள் போதியளவில் இல்லாமை காரணமாக 18295 பூச்சாடிகள் திறந்த வெளியில் | பூச்சுப் பூசல் 2021 இறுதிக் காலாண்டில் முடிவடைவதற்கு முன்னர் பூர்த்திசெய்வதற்கும் பூச்சாடிகள் நாற்றுமேடை தேவைக்காக பயன்படுத்துவதற்கும் ஏனைய பூச்சுக்களை நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. | தேவைப்பாடு முறையாக இனங்காணப்பட்டு கொள்வனவு மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | சீதாவக்க ஈரவலய தாவரவியல் பூங்காவிற்கு உரிய சிற்றுண்டிச்சாலை அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவை பின்பற்றப்படாமல் நலன்புரிச்சங்கத்திற்கு ரூபா.15,000 ஆன மாதாந்த நில வாடகை அடிப்படையில் முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடாமல் 2016 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக சிற்றுண்டிச்சாலையை கேள்வி கோரி வழங்குவதன் மூலம் உழைக்க கூடியதாக இருந்த வருமானம் அரசிற்கு கிடைக்காமல் போயிருந்தது. | 2021 ஆம் ஆண்டு முதல் அச்சிற்றுண்டிச்சாலை பத்திரிகை மூலம் அறிவித்தல்களை வெளியிட்டு குத்தகை வாடகையை அடிப்படையாக கொண்டு வழங்கவுதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அரசிற்கு பெற்றுக் கொள்ளக்கூடிய வருமானத்தை செயற்திறனாக உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிர்மாண அபிவிருத்தி மற்றும் பயிற்சி அறிறுவனத்தின் (ICTAD) நிர்மாண கேள்வி தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் இறுதிப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு 28 நாட்களுக்குள் பொறியியலாளரால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய தொகையை உறுதிப்படுத்த வேண்டிய போதும் பேராதனை ரோயல் தாவரவியல் பூங்காவின் களஞ்சியத்தின் கூரையை திருத்தம் செய்வதற்காக ஒப்பந்தத்தின் இறுதி விலை 2020 ஆகஸ்ட் 26 ஆந் திகதி கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிந்த போதும் 2020 ஒக்தோபர் 27 ஆந் திகதி வரையில் ரூபா.2,335,016 ஆன கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி காணப்பட்ட வாக்குப் பண செயற்பாட்டு கணக்கில் போதியளவு நிதிஏற்பாடு இல்லாமையே இக்கொடுப்பனவிற்கான தாமதத்திற்கு காரணமாக இருந்தது. | நிர்மாணக் கேள்வி தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.13 மோசடித் தனமையான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரோயல் தாவரவியல் பூங்காவின் களஞ்சிய கட்டிடத்தினை திருத்தம் செய்யும் ஒப்பந்தத்திற்குரிய இரண்டாவது பட்டியல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்பட்டியல் பொறியியலாளரின் கீழ் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரால் பரீட்சிக்கப்படாதிருந்ததுடன் விடய எழுதுனரால் பிரதான கணக்காளர் அறிவுறுத்தலின் பிரகாரம் அந்த அளவீட்டுப்பத்திரம் மற்றும் பட்டியல் பொழிப்பு திருத்தம் செய்யப்பட்டு உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பட்டியலின் பிரகாரம் வேலைத்தளத்தில் காணப்பட்ட ரூபா.2,140,162 பெறுமதியான பொருட்கள் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. வேலைத்தளத்தில் காணப்படும் பொருட்களுக்காக அப்பொருட்களின் பெறுமதியில் 80 சதவீதத்தையே வழங்க முடியுமாக இருந்த போதும் இந்த ஒப்பந்தத்தின் உரிய வேலைத்தளத்தில் காணப்படும் பொருட்களுக்காக முழுத் தொகையையும் கொடுப்பனவு செய்வதற்கு உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நிதிஏற்பாடு போதாமை காரணமாக ரூபா.918,682 நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 139 இணங்காத வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதன் போதிலும் ஒப்பந்தக்காரர் செய்த வேலைகளை பொறியியலாளரிடம் வாய்மொழி மூலம் விசாரித்து உறுதிப்படுத்தியதன் பின்னர் செய்யப்பட்ட கொடுப்பனவு ஒன்றெனவும் இதன் பின்னர் எதிர்காலத்தில் இருப்பு பதிவேடு மற்றும் ஏனைய அனைத்து கோவைகளும் பொறியியலாளரால் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தியதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு ஆலோசணை வழங்கியுள்ளதாகவும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரோயல் தாவரவியல் பூங்காவின் களஞ்சிய கட்டிடத்தினை திருத்தம் செய்யும் ஒப்பந்தத்திற்குரிய அவுப்பத்திரம் மற்றும் அளவீட்டுப்பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள உருப்படி இலக்கம் 06 இன் பிரகாரம் ஓரச்சுவருக்காக 19.85 | 06 ஆம் உருப்படிக்காக ரூபா 51,682 ஆன தொகை ஒப்பந்தக் காரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | மதிப்பீட்டின் பிரகாரம் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கனமீற்றருக்காக ரூபா.260,035 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அதன் அளவு 15.9048 கனமீற்றராகும். அதன் பிரகாரம் உள்ளவாறான பெறுமதி ரூபா.208,353 ஆக இருந்தமையால் ஓரச் சுவருக்காக ரூபா.51,682 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |

**4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதன் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரிய கம்பஹா தாவரவியல் பூங்காவில் வாகன நிறுத்துமிட வசதிகளை மேம்படுத்துதல், நூலகமொன்றை அமைத்தல், தகவல் மத்திய நிலையமொன்றை தாபித்தல், தாவரவியல் விஞ்ஞான நூதனசாலையொன்றை அமைத்தல், தாவர மற்றும் விலங்குகள் தொடர்பான விரிவான கண்காட்சி பதாதைகள் மற்றும் கழிவுப்பொருள் வெளியேற்றும் செயற்திட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.<br>ஒவ்வொரு ஆண்டிலும் நிறைவேற்றக்கூடிய அளவுகள் தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் குறித்த நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யப்பட வேண்யதுடன் திணைக்களத்தினால் ஒவ்வொரு ஆண்டிற்காக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக திட்டங்கள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்காக பல நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக சகல இடங்களிலிலும் அனைத்து வகையிலும் வறுமையை ஒழித்தல், அனைவருக்கும் முழுமையான, நியாயமான சிறந்த கல்வியை உறுதிப்படுத்தி ஆயுள் பூராகவும் கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், மற்றும் பல்வகைப்படுத்தல் பாதுகாப்பு, பாலைவனமாதலை ஒழித்தல், காட்டுத் தாவரங்களை பாதுகாப்பதன் மூலம் சுற்றாடலுக்கு சமநிலைப்படுத்தலை பாதுகாக்கும் பொருட்டு (SDG) 03 தாபிக்கப்பட்டிருந்த போதும் இலக்குகளை நிறைவேற்றும் போது தாபிக்கப்பட்டுள்ள இலக்குகள் / நோக்கங்களுக்கு புறம்பாக ஏனைய இலக்குகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. மேலும் நிலையான அபிவிருத்தி நோக்கங்களில் ஒவ்வொரு சுட்டியை அளவிடுவதற்காக அளவீட்டு கருவிகள் அல்லது நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி நோக்கங்களில் சுட்டிகளை அளவிடுவதற்காக அளவீட்டு கருவிகள் அல்லது நடைமுறையொன்று இனங்காணப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பூங்காக்களின் செயற்பாடுகளை முறையாகவும் படிப்படியாக பேணிச்செல்வதற்கு ஊழியர் தேவைப்பாட்டினை பொருத்தமான சந்தர்ப்பங்களில் இனங்கண்டு தேவையான சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை 159 வெற்றிடங்கள் காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கவில்லை. | அத்திவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |